# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **28 ஏப்ரல் 2019** | **இறை இரக்கத்தின் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



## ஆண்டவர் இயேசுவின் இரக்கத்தைத் தொட்டு சுவைத்துப் பாருங்கள்.

## உங்கள் சிந்தனைக்கு...

அன்பு சகோதர சகோதரிகளே! பாஸ்கா கால இரண்டாம் வாரத்திற்கு வந்துள்ளோம். இறை இரக்க ஞாயிறு என்றும் இது அழைக்கப்படுகின்றது. இறை இரக்கத்தை நாடி ஆலயம் வந்துள்ள உங்கள் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள்!

இறந்து உயிர்த்த இயேசு முதல் முதலாகத் தன் பெண் சீடர் மகதலா மரியாவின் வழியாகத் தனது உயிர்ப்பை உறுதிச் செய்து விட்டுக் கலிலேயாவில் தன் சீடர்களைச் சந்திக்கச் செல்லுகிறார். இயேசுவின் மரணத்திற்குப் பின் மற்ற சீடர்கள் பயந்திருக்கத் துணிவோடு வெளியே சென்று வந்த தோமையார் மூலம் மீண்டும் தன் உயர்ப்பை அறிக்கையிடச் செய்கிறார். நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்! என்று போற்றி ஆண்டவரைக் கண்டு கொண்ட தோமையார் மூலம் காணாமல் இயேசுவை நம்பும் நம்மை எல்லாம் பேறு பெற்றோர் என்று வாழ்த்துகின்றார்.

இயேசுவைச் சந்தித்த பலரும் தாங்கள் வாழ்க்கையில் பெரியதோர் மாற்றத்தை அடைந்தது போல நாமும் அவர் பெயரில் நம்பிக்கை கொண்டு அவரின் பேரிரக்கத்தைப் பெற்று உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழ வரம் வேண்டி இன்றைய திருப்பலிக் கொண்டாட்டங்களில் நிறைவாய் பங்கேற்போம். மனிதர் விரும்புவதாலோ உழைப்பதாலோ எதுவும் ஆவதில்லை; கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது (உரோ 9:16) என்ற தூய பவுலின் வார்த்தைகளை மனதில் கொண்டு, இறை இரக்கத்தின் ஞாயிறான இன்று, ஆண்டவர் இயேசுவின் இதயத்திலிருந்து அனைத்து ஆன்மாக்களுக்காகவும் பொங்கி வழியும் இரக்கத்திற்காக மன்றாடுவோம்.

**தூய லூர்து அன்னை ஆலய, இறை இரக்க பக்தி குழுவினர் அனைவருக்கும் பங்குத் தந்தை மற்றும் உதவிப் பங்குத் தந்தையர்கள் சார்பாக, திருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**




### ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி




**இன்று மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

ONE OFFICE FOR THE NEW EVANGELISATION

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**01-05-2019 புதன் - மே தின விடுமுறை**




காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
(மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின்இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)
அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

## நற்கருணை ஆராதனை வழிபாடு

**05-05-2019 ஞாயிறு மாலை 5:00 மணி**



திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**11-05-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**



இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | திருத்தூதர் பணி 5:12-16 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 118:2-4, 22-24, 25-27 |
| **பதிலுரை:** | ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு. |
| **இரண்டாம் வாசகம்:** | திருவெளிப்பாடு 1:9-11a,12-13, 17-19 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! தோமா, என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா | |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 20:19-31 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

